# 3

# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 10

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

## முயற்சியாண்மையின் நன்மைகள் - விடைகள்

(1)

| | |
|---|---|
| 1. | ③ |
| 2. | ④ |
| 3. | ③ |
| 4. | ③ |
| 5. | ② |
| 6. | ① |

(2)

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பவர்கள் முயற்சியாளர்கள் ஆவர். நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து மனிதனுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வது இவர்களது கடமையாகும். இயற்கையின் படைப்புக்களைத் தவிர உலகில் உள்ள அனைத்து உற்பத்திகளுமே முயற்சியாளர்களின் படைப்பாகும். இதன் காரணமாக நாட்டிற்கு முயற்சியாளர்கள் தனித்துவமான நபர்களாக கருதப்படுகின்றனர்.

2.

- முயற்சியாளருக்குக் கிடைக்கின்ற நன்மைகள்
- தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கின்ற நன்மைகள்

3.

- தனிநபர் ஒருவரின் தலைவிதியானது அவரிடத்திலே இருப்பது.
- பணிகளில் வேற்றுமை உருவாகின்றமை.
- சமூக நலன் பொருட்டு பங்களிப்பு செய்யக் கிடைக்கின்றமை.
- பயன்படுத்தாத ஆற்றல்களை பயன்படுத்திக் கொள்ளக் கிடைக்கின்றமை.
- கவர்ச்சிகரமான இலாபத்தினை உழைத்தல்.
- வளர்ச்சியின் பொருட்டு ஆட்களுக்குக் கிடைக்கின்ற உயர்ந்த பட்சமான வாய்ப்புக்கள்.
- சுதந்திரமும் மிக உயர்ந்த ஆத்ம திருப்தியும் கிடைக்கின்றமை.

4.

- சமூக ரீதியாக கிடைக்கின்ற உயர்ந்த அங்கீகாரம்.
- சமூக செயற்பாடுகளில் தலைமைத்துவம் கிடைக்கின்றமை.

- புகழும் பாராட்டுக்களும் கிடைக்கின்றமை.

5.

- தொழில்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- பாடசாலையில் பயிலும் குறைந்த வருமானம் பெறும் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்துக் கொடுப்பதும், உபகரணங்களை வழங்குவதும்.

6.

- உரிமையாளர்
- முகாமையாளர்
- தலைவர்

7. உரிமையாளர் எனும் பாத்திரம் மூலம்

8.

1) கவர்ச்சிகரமான இலாபம்
2) தன்னிறைவு நிலை
பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யும் ஆற்றல் அதிகரித்தல்.

9. இங்கு முயற்சியாளராக இருப்பதன் நன்மைகள், ஊழியர்களாக இருப்பதன் நன்மைகள் குறிப்பிடப்பட வேண்டும்.

10. ஒரு நபர் ஒரு வேலையைச் செய்வதைக் கருத்தில் கொள்ளும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே செய்ய வேண்டும். ஆனால் ஒரு முயற்சியாளருக்கு பணியின் அத்தகைய திட்டவட்டமான பகுதி எதுவும் இல்லை. அவர் எப்போதும் வெவ்வேறு நடவடிக்கைகளில் (அவரது வணிகத் தேவைகளுக்கு ஏற்ப) ஈடுபடுகின்றார். தலைவர், ஊழியர்கள், முகாமையாளர், வழிகாட்டி எனப் பலதரப்பட்ட பாத்திரங்களில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றிருப்பது, அவருடைய பல்வேறு திறன்களைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

11.

- தேசிய வளங்களைப் பயன்படுத்தல்
- பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுகின்றமை
- புதிய பொருட்கள், சேவைகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தல்
- தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்
- முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கக் கூடிய ஆற்றல்
- நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரித்தல்
- வருமான பகிர்வு ஏற்றத்தாழ்வுகள் குறைவடையும்
- பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்
- தன்னாதிக்கமுள்ள சுதந்திமான பொருளாதாரச் சமூகம் உருவாகுதல்

12.

i. நாட்டின் வருமானத்தில் பெரும் பங்கு சிறு குழுவினரிடத்தே பிரிந்து செல்லல்/ வருமானம் மக்களுக்கு மத்தியில் சமமாக பிரிந்து செல்லாமை.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

ii. வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம்
உள்ளூர் வளங்களை பயன்படுத்துவதன் மூலம்
பிரதேச வளர்ச்சிக்கு பங்களிப்பதன் மூலம்

13.

(1) பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி

(2) வளங்களைப் பயன்படுத்தல்

14. பொருட்கள் : ஸ்மார்ட் போன்கள், இலத்திரனியல் கார்கள்

சேவை : இலத்திரனியல் வங்கிச் சேவை, வீட்டிற்குச் சென்று பொருட்களைவிற்பனை செய்தல், இலத்திரனியல் பண பாவனை

15. முயற்சியாளர்கள் பொருட்கள் மற்றும் சேவையை விநியோகிக்கின்றார்கள். எனவே முயற்சியாளர்களின் அதிகரிப்பு பொருட்கள், சேவைகளின் உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்தும். இது நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கும்.

16.

1) ஒருநாட்டில் காணப்படும் வேலைவாய்ப்பு உருவாக்கம், வருமான அதிகரிப்பு, வாழ்க்கைத்தர மேம்படுத்துதல் என அனைத்து துறைகளிலும் ஏற்படும் வளர்ச்சியாகும்.
2) அவர் நாட்டில் புத்துருவாக்கத்தில் ஈடுபடுவதன் மூலமாக பொருட்கள் மற்றும் சேவைகளை அதிகரிக்கின்றார். அவர் தொழில் வழங்குனராக, மக்களின் வருமானத்தை அதிகரித்து வருமானப் பங்கீட்டின் சமமின்மையைக் குறைத்து, இதனால் மக்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சிக்கும் முயற்சியாளர் பங்களிக்கின்றார்.

17. வெளிநாட்டு இறக்குமதிகளில் சார்ந்திருக்க தேவைற்ற பொருளாதாரம்

18. வேலை செய்யும் வயதில் வேலை செய்ய விருப்பம் இருந்தும் தொழில்அற்ற நிலையாகும்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

COMMERCE & BUSINESS STUDIES BRANCH